விலை: 2-00

# நீதி

நீதியின் மூன்றாவது படி ஆடிமாதம்

## பார்வையில் சாந்தமும் பண்பான அணுகுமுறையும்

பார்வைகள் பலவகை அணுகுமுறைகளும் அவ்விதமே இதயத்தின் சிந்தனைகளாலும் மனநிலைத் தாக்கங்களினாலும் கருத்து வேறுபாடுகளினாலும் தோன்றும் வெறுப்பு விரோதங்களினால் பார்வைகள் பல கோணங்களில் பலவகைப் படுகின்றன. இவ்வுண்மைகளுக்கமையவே அணுகுமுறைகளும் மாற்றமடைகின்றன. எவ்வகையில் நோக்கினாலும் பார்வைகளுக்கும் அணுகுமுறைகளுக்கும் ஏற்பவே நன்மை தீமைகள் மனிதர்களுக்கு அன்றாடம் கிடைக்கப் பெறுகின்றன. வெறுப்பை வெளிப்படுத்தும் புரிந்துணர்வற்ற பார்வையும்




மனிதநேயமின்றி தெளிவற்ற சிந்தனைகளால் நடைமுறைப் படுத்தப்படும் பண்பற்ற அணுகுமுறையும் உலகை மேலும் அழிவு பாதைக்குத்தான் இட்டுச் செல்ல முடியுமேயன்றி மனிதாபிமானத்தையோ இயற்கையின் சக்திகள் கூட மதிப்பளிக்கும் நீதியையோ பேணிப்பாதுகாக்க ஒருபோதும் உதவாது.

பார்வையில் சாந்தமும் பண்பான அணுகுமுறைகளுமே, மனித இனத்தினது (பிற உயிரினம் உட்பட) நல்வாழ்வை உறுதிப்படுத்த உதவும் இறைவனின் வெளிப்பாடாகும் நீதிதேவதையின் இருப்பிடமும் இதுவே.''

> தெளிவற்ற சிந்தனைகள் என்றுமே தத்துவங்களாக உருவாகுவதில்லை மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை.

# மனச்சாட்சியை மூடிமறைப்பதேன்?

உலகில் கடவுள் உண்டா? இல்லையா? என்ற ஆய்வுகளும், விவாதங்களும் உலகின் பல பாகங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன அவற்றை விட்டு விடுவோம், ஆனால் உலகில நன்மை' தீமை என்ற இருசக்திகள் மனிதனுடைய அன்றாட வாழ்வில் குறுக்கிடுவதை ஒவ்வொரு மனிதரும் நன்கு அறிவோம்,

இதில் நன்மை எனும் நல்வழிமனத் தூய்மை யாகவும நெறிதவறாது வாழ்வும வழிசெய்கின்றது' தீமை எனும் தீயவழியோ மனிதனை பிறருடைய பழிச்சொற்களையும், தூற்றல்களையும் ஏற்றுக் கொள்ளும் வகையிலும், வெறுப்பு விரோதங்களையும் தேடிக்கொள்ளும் வகையிலும'ன பாதையில் இட்டுச் செல்லுகின்றது'

அதேசமயம இன்னொன்றையும் நாம அவதானிக்கலாம நல்வழி மனிதனுக்கு பெருமபான உலக சுகபோகங்களையோ, படாடோபவாழ்வையோ' நிறைந்த நின்மதியையோ அள்ளி வழங்குவதில்லை மாறாக கல்லிலும்' முள்ளிலும, இடறும படியான சோதனைமிகுந்த வாழ்வையே கூடுதலான காலங்களுக்கு வழங்குகின்றது°

பொதுவாக: இயற்கையின் வாரிசுகளாகிய மானிட சமூகத்தில் பெரும்பாலானோர் உலகின் மாயை எனக் கருதப்படும் செயற்கைச் சிற்றின்பங்களிலும், சுகபோகங்களிலும் இயற்கைச் சிற்றின்பங்களிலும் அதிக ஈடுபாடுகொண்டு மன உணர்வுகளையும் உடல் உணர்வுகளையும் அலைபாயவிடும்போது ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மை தீமைகளை வகுத்தறிய வாதாடும் வலலமை பொருந்திய மனச்சாட்சியானது: அலைபாயும் உணர்வுகளுக்கிடையே புகுந்து நல்வழிக்காகவும், நெறிதவறாத வாழ்வுக்காகவும் வாதாடுகின்றது.

ஆனால் சபலத்திற்குட்பட்ட மனிதன் சுகபோகங்களின் இன்பங்களை இழக்கச் சம்மதிக்காது மனச்சாட்சியை மூடிமறைப்பதோடு பகுத்தறிவின் துணைகொண்டு தனது தவறுகளுக்கு நியாயமும் கற்பிக்க முனைகின்றான்.

> மனிதாபிமானத்திற்கு மதிப்பற்ற நாட்டில் அமைதியை எதிர்பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

## மனித உருவமும் உன்மத்த உள்ளமும்

தோற்றத்தில் சிறியதும் நினைவுகளில் இப்பரந்த உலகைவிடப் பல மடங்கு விசாலமானதுமாகிய இதயத்தின் பரந்த அன்பிற்கு மதிப்பளிக்காது அணைபோடுபவன்-

வரலாறு கற்பித்த பண்புகளை மறந்து வாழ்பவன்.

தனது ஆசைகளுக்காக் அற்பத்தனமாக நடப்பதையும் நியாயமென வாதாடுபவன்,

நியாயமற்ற முறையில் இன்பங்களைப் பெறுவதற்காக மனச்சாட்சியை மூடி மறைப்பவன், கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாது அதற்கடிமையாகி கொடுஞ் செயல்கள் புரிபவன்

உண்மையான அன்பின் வலு ஏற்படும் பாசத்திற்கு விலை பேசுபவன்.

தாய்ப்பாசத்தின் வலிமைகளை உணராதவன்.

உன் ஆருயிரை அடிப்படையாகக் கொண்டு சமூகத்துடன் கூடிவாழ விரும்பாதவன்,

ஏழைகளின்ஆதங்கஉணர்வுகளையும்வறியவர்களின் அபிலாசைகளையும் துச்ச மன மிதிப்பவன்.

குறுகிய சிறு விரோதத்தையும் கடும் பகையாகக் கருதி பழிவாங்கத் துடிப்பவன்.

தன்னுடைய சுயநலத்திற்காக பிறருடைய தேவைகளை பறித்தும் அழித்தும் வாழ்பவன்,

இத்தனை செயற்பாகளுக்கும். மூலகாரணமாக பணத்தைப் பயன்படுத்தி அதைக் கடவுளென வணங்குபவன்.

அடிவருடிகள் மட்டும் கூடுதலாக வாழும் சமூகத்தின் மத்தியில் நிலையற்ற செல்வத்தினால் வழங்கப்படும் போலி அந்தஸ்தைப் பெறலாம்.

ஆனால் மனிதர்களின் இதயத்தைமட்டும் ஊடுருவிப் பார்க்கும். இறைவனின் சமூகத்தில் இவன் மனிதன் என்ற உண்மையான அந்தஸ்தைப் பெற தகுதியற்றவன்.

அதே சமயம் இவன் வேதனையில் வாழ்பவர்களின் மறைமுக பகிரங்க வெறுப்பையும்' இயலாமையால் கொந்தளிக்கும் இதயங்களின் சாபத்தையும், பெற்றுக் கொள்கிறான் இப்பூவுலகில்.

### சுயநலவாதிகள்

அராஜகத்தின்ஆணிவேர் சுயநலமாகையால் அதைப் புரிந்து கொள்ளாது நேரடியாகச் சுட்டிக்காட்டுது விவேகமான செயலாகாது. சுயநலவாதிகள் ஒரு போதும் தமது தவறை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் ஏனெனில் தவறைத் திருத்திநடக்க வேண்டிய அவசியம் ஏற்படும் போது சுயநலத்தை இழக்க வேண்டுமே என்னும் சந்தேகம் தலைதூக்குவதனல்,

## கல்வி செல்வம் வீரம்

### உண்மையான கல்வி

சிந்தனைகளை ஒரே துறையில் ஈடுபடுத்தி ஏட்டில் மட்டும் கவனம் செலுத்திக் கற்பது நடைமுறைக் கல்வி குறிப்பிட்ட ஏடுகளுக்கப்பாற்பட்டு இல்லறவாழ்வின் சுமைகளைத்தாங்கி. கூடிப் பழகும் நண்பர்கள் உறவினர் போன்றோரின் வாழ்க்கை நடைமுறைகளை அவதானித்து இன்பத்திலும் துன்பத்திலும் இடையூறுகளின் மத்தியிலும் பொறுமையுடன் பெறும் அனுபவம் உண்மையான சிறந்த கல்வி.

### உண்மையான செல்வம்

இன, மத, மொழி, நிற, வர்க்க பேதங்களுக்கு அப்பாற்பட்டு பிறருடைய தவறுகளையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு.மனிதனுக்குமட்டும மதிப்பளித்து பெரும்பாலா மன்தர்களைச் சம்பாதித்துக் கொள்வதே உண்மையான செல்வம். (நிலையற்ற பொருளாதாரமல்ல செல்வம)

### உண்மையான வீரம்

ஆசா பாசங்களுக்கு உட்பட்ட மனித வாழ்வில் சுக போகங்களுக்கு உட்பட்ட படாடோப வாழ்வைத் தருவதற்கு ஈடாக நற்குணங்களை விற்புறுத்துக் கேட்கும் பணம்-

இப் பணத்தின் மாயைக்குள் சிக்காது ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தி அநீதிகளுக்கு அடிபணியாது வாழ்வதே உண்மையான வீரம். (உடற்பலத்தால் சாதிப்பதல்ல வீரம்.

## உண்மைகள் எம்மிடமே

வாழ்க்கையில் வறுமை வாட்டிட ஒருவன்
பொறுமைதனை இழந்து பிறர்பொருள் கொண்டால்
சத்தமேயின்றி சந்தடிசெய்யாது தயபொருள் அனைத்தையும்
புதைத்திடுவார் எங்கணும,

சிற்சிலசமயம் சிலரதுபிணங்கள் சமூக விரோதிஎன
வழிதனில்கிடந்தால் இவனுக்கு வேணும இதுவும் காணாது
இப்படிப்பலரையும் ஒழித்திட வேண்டும்.

இல்லையெனில் நாட்டில் மலிந்திடும் களவுகள்
செய்தவர் யாரோ சிறந்தது இதுவென்றே
கூறிடுவார் பலரும் செல்வச் சீமான்களே

நீதிமான்கள் நாமே உண்மைகளும் எம்மிடமே
என்றே கூறிக்கொண்டு பலரது உழைப்பையும்
பகருவமாய் அட்டைபோல் உறிஞ்சியே குடித்திடும
பணப்பேய்களாம் இவர்களை விடவா கொடியவர் கள்வர்
இல்லாமையால் திருடிடுவோர்?

செய்தது களவுதான் காரணம் என்ன?
வாழ்க்கையில் வறுமையா? வாழ்ந்திட முடியாதா?
இல்லாமை உணர்வுகளை ஒழித்திட முடியாதா?
நாட்டுநிலை என்ன? மாற்றிட முடியாதா
எனபவை அனைத்தையும் ஆழ்ந்தே சிந்தித்ததால்
குற்றப்பவரென்றும் யாரென்பது புலனாகும்.
இவர்கள்பெறும் பட்டமோ கள்ளன்' கொலைகாரன்
காமுகன் அயோக்கியன். முன்னவர் பெறும் பெயரோ
தியாகி கொடைவள்ளல் உத்தமராம் மேதினியில்.
தவறில்லை யார மீதும் அமைப்பிதே சமூகத்தின்
உணர்ந்திட்டால் மறைந்திடும் பாட்டாளி வர்க்கமதே

> இதயத்தூய்மையுடன் கூடிய உண்மையான அன்பும் நட்புறவும் சகோதரத்துவ உணர்வுமற்ற சமூகத்தின் சமூகத்தின் மத்தியில் அராஜகம் தவிர்க்க முடியாததே.

## கொந்தளிக்கும் உணர்வுகளின் கிடங்கே நீதி

ஏற்றுக்கொள்ளுங்கள்

எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்துவதில் ஆண்களைவிட பெண்களுக்கு அதிக பங்குண்டு என்பதை உணர்ந்த வது: கட்டுப்பாடற்ற தான்தோன்றித் தனமான சுதந்திரங்களை நாடுவதைப்பெண்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

# நீதி

# மதுபோதையால் மட்டும் ஏற்படுவதல்ல வெறி

சுயசிந்தனைகளுடன் அன்றாடக கடமைகளில் ஈடுபட்டு வரும் ஒரு மனிதன் இருபத்திநான்கு மணி நேரமும் ஒரே சிந்தகளுடன் வாழ்வதில்லை.

போதை தரவல்ல மது பானத்தை உட்கொள்ளும ஒருவன் தன்னுடைய சுய உணர்வுகளை இழக்கிறான்.

சிலசமயங்களில் போதை நிலையில் நடமாடும் ஒருவனிடத்தில் இடம், பொருள், சூழ்நிலைகளை மறக்க வைக்கும் 'வெறி' ஏற்படுகின்றது' இத்தகைய நடைமுறைகளாலேயே குடிகாரன், வெறிகாரன் என்ற சொற்பதங்கள் சமூகத்தால் இழிநிலையில் கருதப்படுகிறன.

இவ்வாறு இழி நிலையில் கருதப்படும் 'வெறி' எனப்படுவது மது போதையால் மட்டும் ஏற்படுவதில்லை வெறுப்பு, விரோதம், புரிந்துணர்வற்ற தன்மைகளை உள்ளடக்கிய கோபத்தின் உச்சக்கட்டமும் வெறியே மனிதனிடத்தில் கோபம் ஏற்படும் போது! சிறந்த சிந்தனைகள் உட்பட பல கோணங்களிலும் உருவாகும் அனைத்துச் சிந்தனைகளும் அற்றுப் போய் விடுகின்றன.

வெறுப்பைப் பிரதிபலிக்கும் ஒரு வகைச் சிந்தனை பல வழிகளைத் தேடும் கோபத்தைத் தீர்ப்பதற்காக (இது இரத்தத்தின் இயற்கையான செயற்பாடு) அச்சமயம் அவனது இதயம் ஏற்றுக் கொள்ளும் திரவுகள் கிடைக்காத பட்சத்தில் கோபம் வெறியாக மாறுவது அவனது அறிவின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகி விடுகின்றது.

ஐந்தறிவுள்ள மிருகங்களிடம் ஏற்படும் வெறியால் விளையும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் பகுத்தறிவாற்றலுடன் கூடிய மனிதனிடத்தில் சொப வேளைகள் மட்டும் நிலைத்து நிற்கும் வெறியானது மிருக உணர்வுகளையும் மிஞ்சியதாக எவராலும கட்டுப்படுத்த முடியாததாக உலகில் ஏற்படுத்திய பாரிய அழிவுச் சின்னங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

மனித உயிர்களிடத்தில் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட பரிவு மிகுந்த அணுகு முறைகளும், வர்க்க பேதங்களுக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளுடன் பெருகிவரும் அன்பேமே மனிதனிடத்தில கோபத்தையும், வெறியையும் அகற்ற வல்ல உலகு நிலைத்து வாழும் உண்மை. செயற் படுத்துவது இதயங்களின் கடமை.

யானையின் மதத்தையும், வெறியையும் கூடக் கட்டுப்படுத்தும் ''மனிதனின் மதம் வறட்டுக் கௌரவமே'' அவனது வெறி உயிர்களின் மகத்துவத்தைப் பூரணமாகப் புரிந்துகொள்ளாமையே.''

4ம் பக்கத்தொடர்

இயற்கை வளங்களில்

அதன் தோற்றம் பயங்கர அழி கருவியாக பரிணமம் அடைந்தது.

இத்தகைய விஞ்ஞான உருமாற்றத்தினால் மனித உயிரின் நீடித்த வாழ்வுக்கு உதவும் சக்தி வாய்ந்த மூலிகைகள். ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்புகளுக்குள் சிக்கும் வாய்ப்பை இழந்தது.

வெவ்வேறு பட்ட மனிதர்களின். மாறுபட்ட அறிவிற்குட்பட்ட சிந்தனைகளின் கருவே விஞ்ஞானத்தின் பல உருவங்கள் எனபது அறிவியள உண்மையானால்? இயற்கை வளங்களினுள் நிட்சயமாக மனிதரின் நீண்ட கால வாழ்வும் மறைந்து தேங்கிக் கிடப்பதும் உண்மையே.

கண்டடைவதற்கு மனிதமுயற்சி போதவில்லை. காரணம் விஞ்ஞான அறிவு அழிவுபாதைகளை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதேயாகும்.

---

## மனிதனாகலாம்

நியாயமற்ற உணர்சிகளைக் கட்டுப்படுத்துபவன்.

பிற உயிர்களையும் தன்னுயிர் போல் மதிப்பவன்.

நீதி நியாயங்களைக் கடைப்பிடித்து வாழ்பவன்.

கோபத்தை மறைத்து குறைக்கப் பழகிக் கொள்பவன்.

தவறுகளை ஏற்றுக்கொள்பவன் உண்மைகளின் வலிமைகளை உணர்பவன்.

இன்னொருவனை அவமானப்படுத்த விரும்பாதவன்.

தன்னுடைய சுகத்திற்காக பிறரை அழிக்காதவன்.

இறைவனுடைய மாறாத அன்பைப் பிரதிபலிக்கும தாயை போற்றி வணங்குபவன்.

நியாயமான ஆசைகளைமட்டும் கொள்பவன்.

பிறரின் முகம் கோண நடக்காதவன்.

தன்னுடைய சந்ததியினரின் தேவைகளுக்கு அதிகமானதை ஏழைகளுக்குக் கொடுப்பவன்.

பிறருடைய பலவீனத்தைப் பயன்படுத்தாதவன்.

பாவிகளையும் அரவணைத்துத் திருத்துபவன்.

அபபாவிகள் மீதும் அன்பு செலுத்துபவன்.

மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவன்.

நீதியை மூடி மறைக்காதவன்.

இயற்கையி சக்திகளுக்கு மதிப்பளித்து வாழ்பவன் மனிதனாகலாம்.

## இயற்கையின் தண்டனைக்குள்ளாகும் மனிதகுலம்

கோடிக் கணக்கான ஆண்டுகளாக சுழன்று கொண்டும்' பரந்த அண்டவெளியில் சூரியனைச் சுற்றிச் சஞ்சரித்துக்கொண்டும் வலம் வரும் உலகில். பல்லாயிரக்கணக்கா உயிரினங் களுக்கு மத்தியில். புத்தி ஜீவிகள் என்ற பெருமைகளுடன் வாழப் பிறக்கும் மனிதகுலம். பகுத்தறிவின் துணைகொண்டு நீதி நியாயங்களை வகுத்தறிந்து அன்பு,பாசங்களை உள்ளடக்கிய உறவு முறைகளைப் பேணிப் பாதுகாக்கின்றன.

இவ்வாறு புத்தி ஜீவிகளெனப் போற்றப்படும் மனிதகுலத்துக்கு பகுத்தறிவு பொவானது எனக் கணிக்கப் பட்டாலும் மனித ஜீவன்கள் அனைத்துமே இதனைச் சரிவரப் பயன்படுத்துதில்லை.

பகுத்தறிவைச் சிறந்தமுறையில் பயன்படுத்தி சாத்திரதின் பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டு. போற்றி வண்ங்கப்படும ஒரு சிலரைத்தவிர ஏனையோர் அனைவரும். இதனைச்சரிவரப பயன்படுத்தத் தவறுவனால் தானே? என்னவோ? உலகில் வாழும்காலத்தில் பொதுவாக

இருவகைத் தண்டனைகளுக்கு உள்ளாகின்றார்கள்.

1 பகுத்தறிவைப் பரந்த அளவில் பயன்படுத்தத் தவறி குறுகிய அறிவுடன் புத்திசாதுர்ய மற்ற செயல்களின் மூலம் சமூகத்தில் சில கீழ்த்தர நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சட்டத்தின் கண்களுக்குத் தென்பட்டு சிறைக்கைதியாகி அங்கே தனது பல தேவைகளை இழந்து அன்புள்ள இதயங்களின் மீது ஆசா பாசங்களைச் செலுத்த முடியாது சட்டத்தை எதிர்க்க க்தியற்று வேதனைப்படுவது.

2 புத்திசாதுர்யமான முறையில் சமூகத்தில் பல கீழ்த்தர நடவடிக்கைகளில் ஈடுபட்டும் சட்டத்தின கண்களுக்குப் புலப்படாது சுகபோக வாழ்வுநடத்துபவர். தமது சகல சுதந்திரங்களையும் இழக்காத வகையிலும் அன்புள்ளவர் மீது ஆசா பாசங்கள் தடைபடாத வகையிலும். நோயென்ற ரீதியில் தாக்கப்பட்டு அவலக்குரல் எழுபுவது-

சட்டத்தின் தண்டனையிலிருந்து மனிதன் விடுபடலாம்.

ஆனால் இயற்கையின் பிடியிலிருந்து மனிதன் தப்ப முடியா ஏனெனில் நோய் அவனது உயிரையே பறித்து விடலாம்

---

## எம் இன மக்களின் இன்றைய வாழ்க்கை நடைமுறை

தமிழ் மக்கள் பல நியாயமான உரிமைகளை இழந்து நிற்பதை இன்றைய பெரும்பான்மையின அரசு ஏற்றுக்கொள்ள வில்லை' ஆயுதப் படைகளின் முறைகேடுகளை இன்னும் உலக நாடுகளுக்கு நியாயப்படுத்தவே முனைகின்றது.

இனக்கலவரங்களின் ஆரம்ப காலங்களில் பல வசதிகளுக்காகவும் பணத்துக்காகவும் ராணுவத்தில் சேர்ந்த சிங்கள இளைஞர்கள்' இன்று தங்களுடைய நாடு என்ற சிந்தனையுடன். துவேஷத்தன் உச்சக்கட்டத்திற்கு வார்க்கப்பட்டு விட்டார்கள்.

இத்தனையயும் நன்குஉணர்ந்தும் சிதறிக் கிடக்கிறோமென்றால் பொய்யில்லை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது.

உடைமைகளை இழந்தோம்:தேற்றிக்கொண்டோம் தேடிக்கொள்ளலாம்.

உரிமைகளை இழந்தோம் வாதாடுகின்றோம்' போராடுகின்றோம் பெற்றுக்கொள்ளலாம்.

அன்புள்ள உயிர்களை இழந்தோம் மீளப்பெற முடியாது ஆறாத் துயரில் வாடுகின்றோம்.

இத்தனை பாதிப்புகளும், பதட்டமும் இழப்புகளும் ஏன் என்னுடையகுடும்பம்,என்னுடைய சுக, துக்கம் என்ற நினைவுகளின் அளவுக்கு அதிகமாகக் கவனம் செலுத்துகிறோம்,

பிறருடைய வாழ்மைபற்றிh சிந்திப்பதைநிறுத்திவிட்டோம் கிடைக்கும் நேரத்தைப் பயன் படுத்திப் பொருள் தேடுவதில் சமூகத்தைப் பற்றியும் 'மனிதாபிமானத்தைப் பற்றியும் அக்கறை கொள்ளவில்லை.

அன்பு' பாசம்' சகோதரத்துவ உணர்வுகளை மதிக்கவில்லை ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணோடேயே நோக்குகின்றோம்

ஒற்றுமையை முற்றாக இழந்து விட்டோம். தொடர்ந்தும் தீர்வற்ற நிலையில் ஏங்குகின்றோம் எமது இந்த நிலைப்பாடு நமது பலவீனத்தை அரசுக்கு எடுத்துக்காட்டி மேலும் பல பிளவுகளை எம்மத்தியில் ஏற்படுத்தவே வழி வகுக்கின்றது-

எதிரியாக இருந்தாலும் திறமையைக் குறைவாக எடை போடக் கூடாது தவறுகளை ஏற்றுக் கொள்ளாது நியாயப்படுத்த முனைவதும்' உண்மைகளை மூடிமறைப்பதும். எம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாகவே முடியும்.

### கொந்தளிக்கும் உணர்வுகளின் கிடங்கே நீதி

# சமூக அபிவிருத்திச் சபை




சமூக சீர்கேடுகளும் போலி வேடதாரிகளும் மலிந்து விட்ட இன்றைய காலகட்டத்தில், எமது சமூகத்தின் மத்தியில் உண்மைகள் நீண்டகாலமாகவே உறங்கிக் கொண்டிருக்கிறது

உண்மையான வாழ்வுக்கு மதிப்பளித்து, ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்பட்ட வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, சகோதரத்துவ உணர்வுகளுடன் கூடிய அணுகுமுறைகளின் மூலம், மக்கள் பேதங்களை மறந்து சேர்ந்து வாழ்வதைக் காண்பது மிகவும் அரிதாகிவிட்டது.

அதே சமயம் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற மேமெழுந்தவாரியான நோக்கங்களுடன், வெளிநாட்டு உதவிகளைப் பெற்று இயங்கிவரும் பொது நிறுவனங்கள், கணிசமான அளவு எமது பிரதேசத்தில் இருக்கவே செய்கின்றன.

நெருக்கடிகளும், பாதிப்புகளும, இழப்புகளும் அதிகரித்துள்ள எமது மக்களுக்கு. இவ்வாறான நிறுவனங்கள், அவ்வப்போது உதவி செய்து கொண்டேவருகின்றன.

இருப்பினும் அவ் உதவிகள் உண்மையில் தேவைப்படுபவர்களுக்கே கிடைக்கிறதா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

ஒரு தடவை பாதிக்கப்பட்ட சிலர், ஆதாரங்களைக் காரணம் காட்டியும், அறிமுகங்களைப், பயன்படுத்தியும பல நிறுவனங்களில் உதவி பெற்றுவருவதனுல், வாய் வல்லமை அற்ற பலர் அவசியத் தேவைகள் இருந்தும் உதவிகளைப் பெறமுடியாது தவிப்பது, இயற்கை என்ருவிட்டது.

குறுகிய அரசியல் அறிவுக்குட்டட்ட, அடக்குமுறை ஆட்சியாளர்களினுல், எம் இன மக்கள் படும் துன்பங்களும்' துயரங்களும் உயிர் இழப்புகள் உட்பட ஏனைய சகல இழப்புகளும் யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனுல் இவ் இழப்புகளும், துன்பங்களும் சமூகத்தின் அடிமட்ட வறிய மக்களும், நடுத்தர குட்டிப் பணக்கார மக்களுக்குமேயன்றி பெரும் செல்வந்தப் பிரபுக்களுக்கோ? பெரும் நிலப்பிரபுக்களாகிய சொத்துடமையாளருக்கோ? அல்ல என்பது உண்மையில்! பாமர மக்களுக்குப் புரியாதே.

ஏனெனில் பெரும் நிலப்பிரபுக்களும்' செல்வந்தப் பிரபுக்களும் தமது செல்வத்தின் துணையை ஆதாரமாக்கி, நாட்டின் குழப்பநிலையைக் கருத்தில் கொண்டு இங்கு எஞ்சியுள்ள தமதுநிலங்களிலும் வீடுகளிலும். ஏழைக் குடிமக்களை பாதுகாப்பிற்காக அமர்த்திவிட்டு அயல் நாடுகளிலும் வெளிநாடுகளிலும் சென்று குடியேறி சுகபோக வாழ்வை அனுபவித்து வருகிருர்கள் இவர்கள் அரசின் கீழ்த்தரமான அடக்குமுறைகளுக்கெதிராகவோ? நீதியான ஆட்சிக்கு ஆதரவாகவோ? ஒரு போதும குரல் கொடுத்ததில்லை.

இங்கு இன்று வாழ்ந்து வரும் குட்டிப் பணக்காரர்களே, வர்த்தகப் பெரும் செல்வந்தர்களோ தமது சேவைகளின் தேவைகளை வலியுறுத்தியும் நாட்டின் தறபோதைய சூழ்நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி மேலும் செல்வம்சேர்க்க முற்படுகின்ருர்களேயன்றி நெருக் கடிகளின உச்சக்கட்டத்தில் பசியில் வாடும் வறிய மக்களுக்கு ஆதரவாக அரசுக்கெதிராக குரல் கொடுக்க மறந்துவிடுகின்ருர்கள்,

அதே சமயம் தமது பொருளாதாரங்களை இழக்கும்போது (கொள்ளையடிக்கப்படும்போது கத்திக் குளறி சர்த்தல்களை நடத்துவதற்கும் இவர்கள் பின்னிற்பதில்லை'

அவ்வேளை அகதிகள் என்ற பட்டத்துடன்வெளித்தோற்ற உண்மைகளுக்குச் சாட்சியம் பகர்பவர்களுக்கு இவர்கள் அவ்வப்போது உதவிவருவதும் உண்மை.

(தமது அடக்குமுறை ஆட்சியினுல் அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்ற பெயரில் அரசு றேஷன் வழங்குவதற்கும், பெயரையும் புகழையும விரும்பி அகதிகளுக்கு உதவிசெய்யும் பெரும் செல்வந்தர்களுக்கும் அதிக வேறுபாடில்லை).

அதற்காக உண்மையான மனிதாபிமான நோக்குடன் தேவைகளின் அவசியத்தை உணர்ந்து உதவுபவர்களில்லை என்ருகாது இவர்கள் பிரபல்யத்தை விரும்புபவர்களில்லையாதலால்: சமூகத்தில் இலைமறை காய் போன்றே வாழ்கின்ருர்கள்.

இவர்களது சிந்தனைகளும் ,லட்சியங்களும் உயர்ந்தவையாக இருப்பதனுல் நிறைந்த பொருளாதார வசதிகள் குடிகொள்ளுவதில்லை.

இவ்வாறு பரந்து விரிந்து தன்னலம் கருதாது சேவைசெய்ய வேண்டும என்ற நோக்குடன் உருவாக்கப்பட்டதே இச்சமூக அபிவிருத்திச் சபை

இச்சபையானது எவ்வித பொருளாதார உதவிகளும் அற்ற நிலையில் உடலுழைப்பை மையமாகக் கொண்டு இயங்கிவருவதனுல் எமது சமூகத்தின் மத்தியில் பிரபல்யமடையாததும் உண்மை·

இருப்பினும் இவர்கள் தமது பெரு முயற்சியினுல் உலகவங்கியின் உதவியுடன் இடம்பெயர்ந்து இங்கு வந்து குடியேறியுள்ள மாணவர்களுக்கு பல் தொழில் நுட்பக் கல்லூரியில் இடம் பெற்றுக் கொடுததமை பாராட்டுக்கு உரியதே.

தொடர்ந்து அண்மைக் காலங்களில் இங்குள்ள அகதி முகாம்களில் தளம்பல் நிலை ஏற்பட்டதைக் கருத்தில் கொண்டு அரசாங்க அதிபரால் அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவின் தலைமையை இச்சபையின் தலைவர் திரு; பரமரட்சகபலன் ஏற்றிருப்பது சாலச் சிறந்தது என்றே எண்ணத்தோன்றுகிறது.

கூட்டுக் குழுவின் சேவைகள் உட்பட! சமூக அபிவிருத்திச் சபையும் தன்னலங்களுக்கும் வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட முறையில் மக்களுக்கு சிறந்த சேவையாற்றி எம்மவர்களது வாழ்க்கையின் குறுகிய வட்டங்களை பரந்த வட்டங்களாக மாற்றியமைக்க உரிய: நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை வகுத்தியற்றி அமுல்படுத்தவேண்டுமென்பது நீதியின் வாழ்த்துக்களுடன் கூடிய பேரவா.

அதேநேரம் இச் சபையானது மக்களின் சேவைக்கெனவே உயாந்த நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டது என்பதை ஒவ்வொருவரும விளக்கங்களுஉணர்ந்து இதன் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்கு உதவும் சிறந்ததோர் சபையாக மாற்றியமைக்க வேண்டுமென்பது நீதியின் பணிவான வேண்டுகோள்

உலகைத் திருத்த முடியுமா? என்று கேட்டால் அனைவரும் சொல்லும் பதில் முடியாதென்பதே ஆனுல்ஒவ்வொருவரும்தன்னைத் திருத்திக் கொண்டால் உலகம் தானுகத் திருந்திவிடும் என்பதை ஏனுேஏற்றுக் கொண்டு வாழ மறுக்கிறுேம்'

இன்றைய இழப்புகளுக்கும் பாதிப்புகளுக்கும் காரணம், அநீதியும்' அறபத்தனங்களும் அதிகாரத் தமையே என்பதைச் சிந்தித்தாவது நெறி தவருது வாழவேண்டியது அவசியமாகின்றது-

## உலகின் பாரிய யுகமாற்றம்

மனித இதயங்களில் ஆசைத் தீ வளர வளர உலகில் அராஜகங்கள் கூடிக்கொண்டே செல்லும் அராஜகங்கள் மலிந்து கொண்டே செல்லச் செல்ல உண்மைகள் மூடி மறைக்கப்பட்டு தூங்கவாரம்பித்துவிடும்.

உண்மைகளின் தூக்கம் காலத்தால் நீடிக்கப்படும் போது உலகில் நீதி நியாயங்கள் குழி தோண்டிப் புதைக்கப்படும்:

நீதி நியாயங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படும் போது தர்மம் ஒற்றைக் காலிலேயே உலகைக் காக்கவேண்டிய நிலை ஏற்படும்,

தர்மம் தனது மறுகாலையும் மேலே தூக்கிக்கொள்ளும் போது ஒரு பாரிய யுகமாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக உயிர்களில் மீது அன்புள்ளம் கொண்ட இறைவனை வேதனை அடையச் செய்யும் இதில் தவறு ஆசைகளுக் அடிமையாகும்மனித இதயங் களினதேயன்றி இறைவனுடையதல்ல.

---

# காலத்தால் அழியாதவடுக்கள்

வடுக்கள்: (காயங்கள் மாறிய பினபு கூடத் தெரியும குறிகள் ஆனுல் இவ்வாறன வடுக்களை காலத்தால் அழியாத வடுக்கள் எனக குறிப்பிடுவது சில சமயங்களில் சில இடங்களில் பொருத்தமற்ற உண்மையாகக் கூட இருக்கலாம்.

ஏனெனில்! சிறுவயதில் விபத்தின் மூலமோ அன்றித் தாக்குதலின் மூலமோ உடலில் ஏற்படும் வடுக்கள் (காயங்கள்) காலப் போக்கில் ஏற்படும் உடல் வளர்ச்சியின் பயனுக இருந்த இடம தெரியாது அழிந்தும் போகலாம்.

ஆனுல் ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்பட்ட சமூக அமைப்பில் உயர் குலத்தாராலோ? செல்வச் சீமான்களினுலோ? இழிநிலையில் கருதப்பட்டு, கீழ்த்தர வார்த்தைகளால் அவமானப் படுத்தப்படும் தாழ்ந்த குலத்தையும் வறிய நிலைச் சமூகத்தையும் சேர்ந்த'' இதயங்களில் ஏற்படும் இயலாமை உணர்வுகளே'' உண்மையில் காலத்தால் அழியாத வடுக்கள்'

இத்தகைய வடுக்கள் எதிர்காலத்தில் செல்வந்தச் சமூகங்களைச் சீரழிக்கும் சட்டவரம்புகளுக்கு அப்பாற்பட்ட சக்தியாகிவிடுவதுமுண்டு. சில சமயங்களில் அதே செல்வந்தச் சமூகங்களின் அடக்கு முறைகளுக்கு உட்பட்டு ஏதுமறியாத அப்பாவிகளாக பலியாக வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்'

எவ்வாருயினும் அவை காலத்தால் அழியாத வடுக்களே,

## தமிழீழத்தில் உண்மை

சூழ்நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி வாழ்கின்ருர்களே யன்றி ஆராய் ஆராய்ந்து பார்த்து நடக்க முற்படுகிருர்களில்லை.

## எதிர்கால சந்ததிக்காக

இம்மாத இறுதிக்குள் இப் பத்திரிகைக்கு ஆசிரியர் குழுவொன்றைத் தெரிவு செய்ய தீர்மானித்திருப்பதால் சிறந்த சிந்தனைகளையுடைய ஆக்கங்களை எதிர்கால சந்ததியிடமிருந்து' அவர்களது நற்பாதையின் மீது தமது வாழ்வை அர்ப்பணித்திருக்கும் தய் தந்தையர் வயோதிபர் போன்ருேரிடமிருந்தும் மிக ஆவலுடன் எதிர்பாாக்கின்றது நீதி. அனுப்பவேண்டிய முகவரி

நீதி ஆசிரியர்
இல-- 119--ஸ்ரான்லி--வீதி
யாழ்ப்பாணம்

கொந்தளிக்கும் உணர்வுகளின் கிடங்கே நீதி

# வேதனையில் வாடும் ஜீவன்கள்

## சிரிக்கவே கூடாதா?

'வேதனை' மனித ஜீவன்கள் அனைத்துக்கும் பொதுவான ஓர் மனநிலைத் தாக்கம்.

எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் ஏற்படும் மனநிலைத் தாக்கங்கள் குறுகியநேரத்தில் தீரும் வேதனையாகவும் நீண்ட காலத்திற்குத் தேங்கியிருக்கும் சோகங்களாகவும் மாற்றமடைகின்றது.

பெரும்பாலும் இவ் வேதனையானது பொருளாதாரத்தில் மேம்பட்டோரை அதிகம் தாக்குவது கிடையாது சோகமாக உருமாறுவதும் கிடையாது.

அப்படியே தாக்கி உருமாறினாலும்- அதை மாற்றி மறைத்துவிடும் சக்தி செல்வத்திற்கு உண்டு.

அதே சமயம் நடுத்தர' வறிய, நிலையில் வாழும் மனிதர்களிடையே தோன்றும் வேதனையின் தாக்கம். வெகுசீக்கிரத்தில் தீர்ந்து விடுவதில்லை எப்படியும் சோகமாக உருமாறி அவர்களை வாழ்க்கைத் தரத்தில் முன்னேற முடியாது பண்ணிவிடுகிறது. அன்றாட உழைப்பை நம்பிவாழும் ஒருவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் வேதனையானது அவ மனநிலையைப்(உணர்வுகளைப்) பெரிதும் தாக்கும் போது அவன் துவண்டுவிடுவது இயற்கை.

இவ்வாறு விரக்தியின் பிடியில் சிக்குவோரை முதலில் பற்றிக் கொள்ளும் நோய மனநிலை உணர்வுகளை மறக்க வைக்கும் போதை தரவல்ல 'மது'- இவ்வகையில் பற்றிக்கொள்ளும் மது இலவசமாகக் கிடைப்பதில்லை. இதற்காக தனது அன்றாட உழைப்பிலிருந்தே செலவிட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாகின்றான்.

இதனால் அவன்மேலும் வறுமையில் உழலவேண்டிய நிலை உருவாகின்றது. காலப் போக்கில் இதுவே சோகமாக உருவாகின்றது. அதேவேளை இத்தகைய நிலையால் அவன் சமூகத்தின் இழி சொல்லுக்கும் ஆளாகின்றான்.[சமூகம் அவனது உண்மை நிலைகளை ஒருபோதும் ஆராய்ந்து பார்ப்பதில்லை) ஆனால் செல்வந்தனிடத்தில் இத்தகைய பெரும் தாக்கம் ஏற்படுவதில்லை' வேதனை தோன்றியதற்கான காரணங்களை ஆராய்ந்து அதை மாற்றமுயலும் அவனது தாய் தந்தையரின்' உறவினரின் முயற்சிக்கு பணம் பக்கபலமாக நின்று உதவுகிறது.

இவற்றை உற்றுநோக்கும் போது வேதனையும், சோகமும் கூட பொருளுணர்ந்தே தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றே சொலலலாம். இவ்வாறு வர்க்கரீதியில் தோன்றும் சோகத்தில் வாழும் ஒருவன் சிரித்தாலும் அது சமூகத்தால் தவறாகவே கணிக்கப் படுகின்றது. இப்படிப் பலதடவை சிரிப்பானேயானால் சமூகம் அவனுக்குப் பைத்தியக்காரன் என்ற பட்டத்தைக் கூட தயங்காது சூட்டிவிடும் பொல்லாத சமூகத்தின் முன் வேதனையில் வாடுவோர் சிரிக்கவேகூடாதா?

---

## குறுகிய மனப்பான்மை

### சேவையல்ல

செய்யும் செயலுக்கு மத்தியில் அந்தரங்கத்தில் பிரதி பலனை எதிர் பார்த்தும் வெளிவார்த்தையில் சேவை என்று கூறியும் செயற்படுவது குறுகிய மனப்பான்மைக்குட்பட்ட அறிவையே குறிக்கும்.

### ஜனநாயகமல்ல

பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், தம் இனத்தின் ஆதரவைப் பெறுவதற்காகவும் மற்றோர் இனத்தின் நியாயமான உரிமைகளையும் சுதந்திரங்களையும் வழங்க மறுப்பதும் குறுகிய அறிவுக்குட்பட்ட செயலேயன்றி பரந்த நோக்குடையதுமல்ல' ஜனநாயக ரீதியானதும் அல்ல.

### கீழ்த்தர அரசியல்

உலகில் மறைந்த மாமேதைகளின் தத்துவங்களையும் உண்மைக்கு' மதிப்பளித்து வாழ்ந்து மறைந்த உத்தமர்களின் வாழ்க்கையையும், தீய நோக்குடனும் 'ராட்டம் கட்டிஎழுப்பபடுவது சர்வதிகாரப் போக்குடனும், ஆட்சிசெலுத்தி அழிக்கப்பட்ட கீழ்த்தர அரசியல் வாதிகளின் முடிவையும் கண்கூடாகக் கண்டும் சிந்திக்காது' அதிகாரத் துஸ்பிரயோகத்துடனான அடக்கு முறைகளின் மூலம் ஆட்சி செலுத்துவது நாட்டின் அழிவை உறுதிப்படுத்தும் குறுகிய மனப்பான்மைக்குட்பட்ட அரசியல் அறிவையே எடுத்துக் காட்டும்.

### சுகபோக வாழ்க்கை

ஒரே நாட்டில்' ஒரே இடத்தில், ஒரே இனமாகப் பிறந்தும்.வாழ்க்கைத் தரா தரத்தில் ஏற்றத் தாழ்வுகளுக்கு உட்பட்டு வாழ்ந்தும் அந்நிய அடக்கு முறைகளால் நடுத்தர,அடிமட்டவர்க்க மக்கள் பாதிக்கப் படுவதைக் கண்டும் எதைப் பற்றியும் சிந்திக்காது அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்காது! சுகபோக வாழ்வு நடத்தும் செல்வந்தர்கள் பேசா மடந்தைகளாக குறுகிய சுயநல வாழ்வு நடத்தும் வரை வெகுஜனப் போராட்டம் பின் தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கும்.

### நியாயமற்ற லாபம்

அந்நிய அடக்கு முறைகளால் தம்மினமக்கள் சிதறி ஓடுவதை நெருக்கடிகளுக்கு மத்தியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்கும் பொருட்டு வர்த்தகர்களாகிய தம்மைநாடி வருவதையும் நன்றாகப் புரிந்து கொண்டு கூட சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நியாயமற்ற லாபம்சம் பாதிக்கும் வர்த்தகப் பெரும் செல்வந்தர்கள். பெயரையும் புகழையும் தேடும் பொருட்டு அகதிகளுக்கு உதவிசெய்வதற்கும், தமது அரசியல் அடக்குமுறைகளால் அகதிகளாக்கப் பட்ட வேற்றின மக்களுக்கு நிவாரணம் என்ற பெயரில் அரசு றேஷன் வழங்குவதற்கும் அதிக வேறுபாடில்லை இவ்விரு சாராரும் குறுகிய அறிவைக் கூட பெருந்தன்மை நிரம்பிய செயல் எனச்சிந்திக்கும் 'மனோ நிலைக்குட்பட்டவர்களே,

### பிறந்து விட்டோம் வருந்துகிறோம்

உண்மைகளை உரைப்பவனை உள்ளபடி சொல்பவனை
பேயனென்றும் பித்தனென்றும் உலகில் பெருமூடனென்றும்
கூறிடுவார் ஏழையெனில்'
அச்சமயம் மற்றொருவன்
கொடுமை பல புரிந்தாலும் காள்ளை லாபமடித்தாலும்
தியாகமே உருவான பெருவள்ளல் இவரென்றும்
ஊரெல்லாம் போற்றிடும் உத்தமர் இவரென்றும்
பல்லவியும் பாடிடுவார் செல்வந்தனாய் இருந்துவிட்டால்
பொல்லாத சமூகமதில் பிறந்துவிட்டோம் வருந்துகிறோம்
மடியவுந்தான் விருப்பமில்லை படாடோப உலகைவிட்டு
பந்தபாசம் இழுக்குதய்யா பாழும் ஆசை தடுக்குதய்யா
ஆசையில்லா மனிதருண்டா அன்பில்லா இதயமுண்டா

---

### ஆசிரியர் கருத்து

## நீதியின் உண்மை நிலை

பணத்திற்காக கீழ்த்தர ரசனைகள் மலிந்துவிட்ட இன்றைய உலகில் எமது சமூகத்தினிடையே! நீதி நியாயங்களுக்கு மதிப்பளிப்பதையோ'? மனிதாபிமானத்தைப் பேணிப் பாதுகாப்பதையோ,? சகோதரத்துவ உணர்வுகளுடன் கூடிய அணுகுமுறைகளையோ'? காண்பது மிகவும் அரிதாகிவிட்டது.

இருப்பினும் பிரயல்யத்தை நாடும் செல்வந்தப் பிரபுகளும் சுகபோக வாழ்வை விரும்பும் சுயநல வாதிகளும்' இவற்றை எல்லாம் மேடைகளில் பேசப் பின்னிற்பதுமில்லை, வெட்கப்படுவதுமில்லை.

இவ்வாறான சமூக சீர்கேடுகளின் தாக்கங்களால் பசியின் கொடுமையான உணர்வுகளுடன் ஏங்கித் தவிப்பவர்களும் நியாயமா உரிமைகளையும், சுதந்திரங்களையும், உள்ளடக்கிய இல்லற வாழ்வைக் கொண்டு செலுத்த முடியாது போராடு பவர்களும் சமூகத்தின் அடிமட்ட நடுத்தரவர்க்க மக்களே.

இவற்றை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்ட 'நீதி; என்னும் இப்பத்திரிகை மாதாந்த வெளியீடு என்று ஆரம்பிக்கப்பட்டு இன்று இரண்டு மாதத்துக்கு ஒன்று என்று சென்று கொண்டிருப்பது. உண்மைகளுக்கு (பொருளாதாரத்துக்கு) ஊக்கமளிக்க சமூகத்தில் யாரும் இல்லாததனாலேயே.

அதற்காக நீதி ஒருபோதும் வருந்தவுமில்லை தளர்ந்துவிடவுமில்லை .

அநீதியும்' அட்டூழியமும் அதிககாலம் நீடித்ததில்லை இதே போன்று உண்மையும் நீதியும் அதிக காலங்களுக்கு மூடிமறைக்க முடியாதவை.

நன்றி

### நீதியின் சிந்தனை

பொருளாதாரக்கண்கொண்டு மனிதனை மதிப்பீடு செய்பவர் உலகில் கீழ்த்தர ரசனைகளுக்கு அடிமையானவர்களே

---

## இயற்கை வளங்களில் மனித வாழ்வு

இயற்கை அழகும், எழிலும். வனப்புமிகுந்தவை மட்டுமல்ல வளங்களும் நிறைந்தவை. இவ் வளங்கள் மனித வாழ்வை செழிப்படையச் செய்வதோடு மட்டும் நின்று விடுவதில்லை. மனிதனைப் பல நூறு ஆண்டுகள் உயிர் வாழ வைக்கும் வகையில். தன்னகத்தே சிறந்த மூலிகைகளையும் கொண்டுள்ளது.

இயற்கையை மையமாககொண்டு, இயற்கைக்கு உட்பட்ட கனிப்பொருட்களை ஆதாரமாகக்கொண்டு' மனித அறிவால் உருவமைக்கப் பட்ட விஞ்ஞானமானது, மனிதனின் நியாயமான தேவைகளைப் பூர்த்தி பண்ணும் வகையில் சிறந்த சிந்தனைகளில் மட்டும் பயன் படுத்தப்படும் நிலையில் அபிவிருத்தி செய்யப் பட்டிருந்தால் கொண்டு செலுத்தப் பட்டிருந்தால் உலகில் மனித இனம் அச்சமடையாது வாழ்ந்திருக்க முடியும்.

ஆனால் குறுகிய அரசியல்வாதிகளின் கீழ்த்தர அடக்குமுறைகளுக்கு உட்பட்ட சட்டங்களினால், விஞ்ஞானம் கட்டுப் படுத்தப் பட்ட போது தான்:

தொடர்ச்சி 3-ம் பக்கம்